Regd. No. M. 5458

விலை அணா ஒன்று — இலங்கை 10 சதம்

"மாலை மணி"

சந்தா விபரம்

ஆண்டொன்றுக்கு ரூ. 24-0-0
ஆறு மாதத்திற்கு ரூ. 12-0-0
மூன்று மாதத்திற்கு ரூ. 6-0-0
ஒரு மாதத்திற்கு ரூ. 2-2-0
சென்னைக்குமட்டும் ரூ. 2-0-0

மாலை மணி

(திராவிடர் தமிழ்த் தினசரி கருத்திதழ்)

ஆசிரியர்: மு. கருணாநிதி

'MALAI MANI' Tamil Daily

Telephone: No. 4502

மலர் 3 — சென்னை 16-12-51 ஞாயிறு ★ வெளியூர் 17-12-51 திங்கள் — மணி 127

தெவிட்டாத தேன் துளிகள்

ரஷ்ய இலக்கியம் (வாணன்) 1—8—0

பூந்தோட்டம் (மு. கருணாநிதி) 0—4—0

மாநாட்டுப் பந்தலில் கிடைக்கும்

திராவிட பண்ணை திருச்சி

★ கண்ணீர்த் துளிகளே! நாட்டின் கண்மணிகளே!! ★

காணிக்கை தாருங்கள்!

பொதுச் செயலாளர் போர்ப்பரணி

திராவிடநாடு பிரிந்திட தக்கதோர் திட்டம்

தேர்தல் பற்றி தெளிவு முழக்கம்

சென்னை, டிச. 16—

தி. மு. க. மாநில மாநாட்டில் நேற்று மாலை 6-20 மணிக்கு, பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள், ஆற்றிய தலைமைச் சொற்பொழிவின் சாரம் வருமாறு:—

வரவேற்புக் குழுவினருக்கும் மாநிலமெங்குமிருந்து வந்துள்ள பிரதிநிதிகளுக்கும், நண்பர்களுக்கும் வணக்கம் கூறுகின்றேன். திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநில மாநாட்டில் அன்பையும் விருப்பத்தையும் ஆர்வத்தையும் காட்டி இத்தகைய வெற்றி பொருந்திய ஒரு காட்சியை அளிக்கும் உங்களனைவருக்கும் நன்றி செலுத்துகின்றேன். இத்தகைய மாநாட்டைக் கூட்டிவைத்த வரவேற்புக்குழுத் தலைவர் தோழர் நடராசனுக்கும் துணையாக அமைந்திருக்கும் மாநில நண்பர்களுக்கும் வணக்கம் செலுத்துகிறேன். இங்குக் காணப்படும் இந்த மகத்தான எழிலுருவம் கண்டு பெருமையடைகிறேன்.

திராவிடத்தின் எதிர்காலம் பற்றி எவருக்காவது சந்தேகம் இருந்தால் 2 நாட்களாக இங்கே நடைபெறும் இந்த மாநாட்டையும், இந்த மாநாட் ...

... புடன் முடிக்கும் ஆற்றல்; வெற்றி காண உழைக்கும் ஆள்றலே நமக்கு வேண்டியதாகும். நமக்குப் பொறுக்கும் தன்மையும் வேண்டும். எதையும் தாங்கும் இதயத்தை நாம் பெறுதல் வேண்டும்.

தி. மு. க. எத்தகைய சங்கிலித் தொடரிலிருந்து வந்த வளையம் என்பதை அனைவரும் உணர வேண்டும். இந்தவளையம் உறுதியும் பண்பாடும் மிகுந்ததென்பதை அறிய வேண்டும்.

பார்ப்பனரல்லாத இயக்கமாகத் தொடங்கி இன்று திராவிட முன்னேற்றக் கழகமாக விளங்கும் இந்த மாபெரும் மகத்தான இயக்கம் மறைந்த மாவீரர் தியாகராசர் இட்ட பிச்சையாகும். அவருக்குப் பின் மறைந்த மாவீரர் நன் பலர் இவ்வியக்கத்தை தங்கள் உயிர் பொருள் ஆவி கொண்டு வளர்த்தனர், அவர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர் தியாகராயர் திராவிட உணர்ச்சியைத் தட்டி எழுப்பினர், டாக்டர் நாயர் போன்ற தலைவர்கள் புயல் எழுப்பினர்கள் இந்தியாவில் மட்டுமின்றி இங்கிலாந்து போன்ற மேனாடுகளிலும் திராவிட விழிப் புணர்ச்சி ...

அனைவருக்கும் நான் மறுபடியும் வணக்கம் செலுத்துகின்றேன். இந்தமாநாட்டினைச்சுற்றிப்பார்த்தால் மாநில மெங்கும் இருந்து வந்திருக்கும் கிளைக் கழகக் கொடிகள், கடல் கடந்த வெளிநாடுகளிலிருந்தெல்லாம் வந்திருக்கும் கிளைக் கழகங்களினுடைய கொடிகள்; எங்கும் அலங்கார விளக்குகள்; உங்கள் அழகான முகங்கள்; உங்கள் முகங்களில் தோன்றும் ஒளிதரும் கண்கள் ...

வளம் பெற்ற தஞ்சையிலிருந்து வந்தவர்களுடைய கொடி பறக்கிறது; வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, சேலம், கோயமுத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் நாஞ்சில் நாடு, கேரளம், கன்னடம், ஆந்திரம், எனத் திராவிடத்தின் அங்கங்கள் அனைத்தும் இங்குக் கம்பீரமாகக் கொடி பறக்க விட்டிருப்பதைப் பார்க்கிறேன். ...

உட்பட திராவிட அனைவரையும் அழைக்கிறேன். பொது உடைமைவாதிகளை, சமதர்மவாதிகளை உண்மை மக்கள் பணியாளர்களை அழைக்கின்றேன். வாருங்கள், ஒன்றுபட்டு வேலை செய்யுங்கள் எங்களிடையிலே மிச்சம் மீதி முதலாளித்தனமிருந்தால் வந்து விரட்டுங்கள்.

நமக்கு ஒரே ஒரு எல்லை உண்டு. அது தொல்லை தராத ...

அம்மா திரிவேணி என்று நம் வீட்டு மாடக்குழியிலுள்ள சாமிகளும் சிறுகச் சிறுகச் சிதைந்து ஒருகின்றன. நம் போன்ற சுயமரியாதைக்காரர்கள் இங்கு குறைவாய் இருந்தகாரணத்தால் இதுவ்ண சாமிகளுக்கு ...

இவற்றைக் குறித்து சுமார் 4 மணி நேரம் பேசினர் 11 மணிக்கு தோழர் இராம அரங்கண்ணல் தலைமையில் மு. கருணாநிதி எழுதிய "காதலா? கடமையா?" என்னும் நாடகம் நடைபெற்றன.

முசுரபுரம்:—28-10-51 ...

ரேஷனுக்குப் பதிலான ஒரு சிறந்த உணவாகவும் இருக்கின்றது என்று கூறுவது மிகையல்ல. இதில் நாம் பெறவேண்டிய வைட்டமின், அயம், சுண்ணாம்பு முதலியன இருக்கின்றன. சமீபத்தில் இந்திய பிரதமர் ...

ரூ. 200,000 செலவழித்துவிடுகின்றனர். எஞ்சியுள்ளது ரூ:100000 இதன் பொருட்டு இந்த வியாபாரத்திற்கு விற்பனைவரி விலக்களித்தால சாககாருக்கு அதிகநஷ்டம ஏற்படாது என்று முடிவில முதலியார் கூறினார்.

கொரியா போர் நிறுத்த அமல் பிரச்னை

பான்முன்ஜான் (கொரியா) டிச. 15—

கொரியா போர் நிறுத்தத்தை மேற்பார்வையிடுவது சம்பந்தமாகக் கம்யூனிஸ்டுகள் நேற்று தெரிவித்த ஆறு அம்சப் பிரேரணையை ஐ. நா. தரப்பினர் இன்று நிராகரித்தனர்.

கம்யூனிஸ்ட் பிரேரணை வருமாறு:- (1) போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகி 24 மணி நேரத்திற்குள் போர் நிற்க வேண்டும் 2 கையெழுத்தாகி 78 மணி நேரத்திற்குள் இராணுவ சூன்யப் பகுதியிலிருந்து படைகள் வாபஸாக வேண்டும்.

(3) ஒப்பந்தம் கையெழுத்தாகி 5 நாட்கள் எதிர் தரப்பின் பின்னணியிலும், தீவுகளிலும் கடலிலும் உள்ள படைகள் வாபஸாக வேண்டும்.

(4) போர் நிறுத்த காலத்தில் புது படை பலங்கள் வரக் கூடாது. ஆனால் பழைய துருப்புகளுக்குப் பதிலாக புதிய துருப்பு ...

ஆயுத சன்னத்தமாவது ஜப்பான் கடமை!

டல்லஸ் கூற்று

டோக்யோ, டிச 15—

மீண்டும் ஆயுத சன்னத்தராவது உரிமை மாத்திர மன்றி ஜப்பானியரின் கடமையுமாகும் என ஜான் பாஸ்டர் டல்லஸ் என் ஜப்பானியரிடம் இன்று கூறினர். ஜாப் சமாதான உடன்படிக்கையை உருவாக்குவதில் முக்கியபங் கெடுத்துக் கொண்ட இந்த யு எஸ். ராஜதந்திரி சுயேச்சை நாடுகளின் கூட்டு பந்தோபஸ்து திட்டத்தில் தனக்காக மாத்திரமன்றி அண்டை தேசங்களுக்காகவும் பங்கெடுத்துக்கொள்ள ஜப்பான் கடன் பட்டிருப்பதாக உரைத்தார்.

அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்ய

இந்திய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

புதுடில்லி, டிச. 15— ... கொள்ள வேண்டுமென்று நீதிபதி உத்தரவிட்டார். ஆண்கள் கலாசாலையில் பெண்களை சேர்த்துக்கொள்ள மறுப்பது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்றும் அவர் தமது தீர்ப்பில் கூறினார்.

... செங்கல்லைக் கும்பிட ஆரம்பித்தனர். சாணியைவிடச் செங்கல் சிறப்பெனக் கருதினார் பிறகு செங்கல்லும் சிதறுவதைக்கண்டு சஞ்சலங்கொண்டு கருங்கல்லில் கரையாத ஆண்ட ...

... யாக வந்து சேர்ந்ததைப் போல சிவனுக்குப்போட்டியாகப் பிள்ளையார் வந்து சேர்ந்தார். கோயில் குளம், குட்டை எங்கும் குடிகொண்டார். முருகன் இருக்கிறன் ஆறுமுகமாக ...

... அளவுக்குக் கடவுள் படடியல வளாமதுவிட்டதால் வெறுக்கிறோம். ஒருங்காலம் கடவுளுக்குள்ளதல்ல; மதத்திற்குரியதல்ல.

... கழகத்தினரும் மாலை மணி பத்திரிகைக்கும் போரவான பத்திரிகைக்கும் அனுப்பி வைப்பதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சேலம் மாவட்ட தி. மு. கழகக் கூட்டம்

18—12—51-ல் அண்ணா அவர்கள் முன்னிலையில் நடைபெறும்

தோழர்களே,

நாளது 18—12—51-ந் தேதி செவ்வாய்ப்பேட்டை அர்த்தனாரி செட்டித் தெருவில் தோழர் கே. கே. மகாதேவன் அவர்கள் இல்லத்தில் காலை 11 மணிக்கு சேலம் மாவட்ட பொதுக்குழுக் கூட்டம். பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் முன்னிலையில் நடைபெறும். சேலம் மாவட்டக் கழக சம்பந்தமான பல முக்கிய விஷயங்கள் ஆலோசனைக்கு வருகிறபடியால் பொதுக்குழு அங்கத்தினர் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு தவறாமல் வரவேண்டுமாய்க் கோருகிறேன்.

ஜி. பி. சோமசுந்தரம்
செயலாளர்
சேலம் மாவட்ட தி. மு. கழகம்.

அறிஞர் அண்ணா

மாநில மாநாட்டு தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவு நாளை வெளிவரும்.

உடனே ஏஜெண்டுகள் தேவை.



இதோ பெரியார் ஈ. வே. ரா, அறிஞர் அண்ணாவின் இருமல் போட்டோ மோதிரங்கள் தயாராகிவிட்டன. முந்துங்கள்! முத்து மாலைகள், நவீன ஆபரணங்களும் உண்டு.

பிரபு ஜெம்ஸ் அண்டு கோ.,
2. கோவிந்தப்பநாய்க்கன் தெரு
மதராஸ்-1

சர்தார் பணிக்கர் 18-வரை லண்டனில் தங்குவார்

லண்டன் டிச 15—

பீகிங்கில் இந்திய ஸ்தானிகராக உள்ள சர்தார் கே. எம். பணிக்கர் 18 தேதி வரை லண்டனில் தங்கியிருப்பார். அங்கிருந்து அவர் நேரே இந்தியாவுக்கு செல்வார் என்று தெரிகிறது.

ஆஸ்திரேலியாவில் கோதுமை உற்பத்திக் குறைவு

மெல்போர்ன், டிச. 15—

ஆஸ்திரேலியாவில் இந்த சீஸன் அறுவடை 16,00,00,000 புஷல்கள் என்றும் சென்ற வருஷத்தை விட இது 7.5 சதம் குறைவானது என்றும் கூறப்படுகிறது.

துருக்கியில் செம்பு ஏற்றுமதிக்குத்தடை

இஸ்தான்புல், டிச 15—

செம்பு 26லாகத்தை எந்த ரூபத்திலும் ஏற்றுமதி செய்யக்கூடாதென துருக்கி சர்க்கார் தடை விதித்திருக்கிறது.

★ தலைவர் கொள்கையினின்றும் வழுக்கி விழுந்தார் ★

காங்கிரசுக்... ஓட்... ...பெருந் தவறு

ஏழைகள் உயர நேரு ஏதேனும் செய்ததுண்டா?

நேருவின் பேச்சைக் கண்டு மயங்கக் கூடாது.

நாகபுரி, டிச. 15— இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சியினால் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமையானது, 100 வருஷ பிரிட்டிஷ் ஆட்சியை விடப் பன்மடங்கு மோசமாக உள்ளது என்று சோஷலிஸ்ட் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறினார்.

“நாட்டின் நிலைமையைச் சீர்திருத்துவதாக இடைவிடாமல் பண்டித நேரு உறுதிமொழி அளித்துக் கொண்டே வந்தார். ஆனால் அந்த வாக்குறுதிகளில் அவர் ஒன்றைக்கூட நிறைவேற்றவேயில்லை. அப்படியிருக்க மீண்டும் காங்கிரசுக்கே ஓட்டுப் போடுமாறு பண்டித நேரு கேட்டுக்கொள்வது சரியா?

காங்கிரஸ் தலைமை பதவியிலிருந்து ராஜினாமா செய்யும்படி தாண்டன் மீது பண்டித நேரு நிர்ப்பந்தம் ஏற்படுத்தினாரல்லவா? இனிமேல் காங்கிரஸில் நிலைமை சீர் திருந்திவிடும் என்று யோக்யமான சிறந்த பிரமுகர்களே காங்கிரஸ் அபேட்சகர்களாகப் பொறுக்கப்படுவர் என்றும் மக்கள் நம்பினர்.

காங்கிரஸ் அபேட்சகர்களைப் பொறுக்க கையாளப்பட்ட முறையானது சரியல்ல என்று பண்டித நேருவே தற்போது ஒப்புக் கொள்கிறார். அப்படி இருந்தும் தேர்தலுக்குப்பின் காங்கிரஸைப் பலப்படுத்துவதாகப் பண்டித நேரு கூறுகிறார். தற்போது பொறுக்கப்பட்டுள்ள காங்கிரஸ் அபேட்சகர்கள் அசெம்பிளி மெம்பர்களாகவும் மந்திரிகளாகவும் ஆனால் அவர்களை பண்டித நேரு நீக்குவாரா? அவர்களை நீக்காமலேயே எப்படி [illegible]

[illegible] 12450 வோட்டுகள் நிராகரிக்கப்பட்டுவிட்டன. ஸ்காட்லாந்தில் 71361 வோட்டர்கள் தபால் மூலம் வோட்டளித்துள்ளனர்.

ஐ. நா. சிப்பந்திகளுக்குச் சம்பள உயர்வு

டிரிக்வெலி அனுமதி கேட்டிருக்கிறார்

நியூயார்க், டிச. 16— வருகிற ஜனவரி 12—லிருந்து ஐ.நா. சிப்பந்திகளுக்கு 75 சதம் சம்பள உயர்வு தருவதற்கு பொது அசெம்பிளியை ஐ.நா. காரியதரிசி ஸ்ரீ டிரிக்வெலி அனுமதி கோரியிருக்கிறார். இதனால் 776000 டாலர்கள் செலவு அதிகரிக்கும் எனத் தெரிகிறது.

விசித்திர இரட்டைக் குழந்தைகள் பிறவி

இரண்டிற்கும் ஆண்குறி பெண்குறி இருக்கின்றன

டாக்டர்களுக்குப் பெரும்புதிர்

ஹைதராபாத் (சிந்து) டிச. 16— இங்கு ஒரு ஸ்திரீக்கு பிறந்துள்ள இரட்டைக் குழந்தைகளுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆண்குறி பெண்குறி இரண்டும் இருக்கின்றன. இரண்டு குழந்தைகளும் பூரண சுகத்துடன் விளங்குகின்றன.

இப்பிரசவத்தைக் கவனித்துள்ள டாக்டர் மிஸ் முகம்மது அலி தான் அநேக வருஷங்களாக இத்தொழிலில் இருந்தும் இம்மாதிரி குழந்தைகள் பிறந்ததைக் கண்டதில்லை யென்றும் இக்குழந்தைகள் வயதானவுடன் ஆணாக மாறுமா பெண்ணாக மாறுமா என்று சொல்லுவது கஷ்டம் என்றும் எதற்கும் நிபுணர்கள் [illegible] ஆராய்வது உசிதம் [illegible] றனர்.

Printed & Pub[lished by] T. M. Parthasrath[y at] the Mercantile Press 2-4[illegible] Muthumari Chetty street Madras-1

[செ]ன்னையில் குடிதண்ணீர்

ஊற்று நீர் திட்டத்துக்கு அங்கீகாரம்

சென்னை, டிச. 13— தாம்பரம் பக்கம் அணைக்கட்டுக்கருகில் குடத்தலையாறு நதியில் பூமிக்கடியிலுள்ள ஊற்று நீரை பம்புகள் மூலம் இறைக்கும் திட்டத்துக்கு சர்க்கார் அங்கீகாரம் கொடுத்து விட்டனர். சென்னையில் ஜல சப்ளை பற்றாக்குறையை தவிர்க்க சென்னை நகரசபை அவசரமாக மேற்கொண்டுள்ள திட்டம் இது. சென்னைக் கடற்கரையில் கரையோரமாக குளங்களைத் தோண்டும் திட்டம் பயனற்றது என்றும் ஆனால் தற்போதுள்ள நீச்சல் குளத்தை அவசரகாலத்துக்கு பயன்படுத்தலாம் என்றும் சர்க்கார் குறிப்பிட்டுள்ளனர். உடனடியாகச் சென்னையில் ஜல சப்ளையில் வெட்டு ஏற்படுத்த அவசியமிருக்காது எனக் கமிஷனர் கூறினார்.

மரணத்தை எதிர்நோக்கியுள்ள கைதிகள் ஸ்டிரைக்

பாரிஸ், டிச 15— பாரிஸில் பிரஸ்னெஸ் சிறையில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள 6 கைதிகள் ஸ்டிரைக் செய்துள்ளனர். தினம் காலையில் உலாவ அனுமதிப்பதை தடை செய்து புது கட்டுப்பாடு ஏற்படுத்தியுள்ளதை ஆட்சேபித்தே இவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். யுத்த குற்றத்திற்காகவே இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

யு எஸ்ஸில் அதிக நிலக்கரி உற்பத்தி

நியூயார்க், டிச 15— யுனைடெட் ஸ்டேட்ஸில் அதிக நிலக்கரி இப்போது எடுக்கப்பட்டு வருகிறது. வெளிநாடு ஏற்றுமதி அதிகரிக்க குறைந்த செலவில் கப்பல் வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென சர்க்கார் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

கண்ணீர் விட்டுக்கலங்கிய நமக்கு வழிகாட்டினர் திராவிட தளபதி

கம்யூனிஸ்டுகள் தேர்தல் தேனை ருசிக்கவந்தனர்

நிபந்தனை கேட்டோம்-நிந்திக்கின்றனர்

நடராசன் வரவேற்பு உரை

வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் என். வி. நடராசன் அனைவருக்கும் நல்வரவு நவின்று, பிறகு ஆற்றிய சொற்பொழிவின் சாரம் பின்வருமாறு:- மாநில மாநாட்டினை மாண்புடன் திறந்துவைத்த நீலமேகம் அவர்களே! கலைக்காட்சித் திறப்புவிழா நிகழ்த்திய சிற்றரசு அவர்களே! மற்றுமுள்ள தோழர்களே, தோழியர்களே! வணக்கம்! மாநில மாநாட்டின் சிறப்புக்களைச் செயல் வடிவாக்கி, மாபெரும் பந்தல் முதலிய வசதிகளை அமைத்து மாநாட்டுப் பந்தலை மாநிலப் பாசறையாக்கி மகிழ்வூட்டும் வரவேற்புக் குழுவாரின் சார்பிலே மிகமிகப் பூரிப்புடன் உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன்! இருந்தாலும் வசதியின்மையுமிருக்கிறது என்பதையும் அறிவிக்கிறேன் அதை பொருட்படுத்தாத கண்ணியகுணத்தையும் உங்களிடமிருந்து எதிர்நோக்குகின்றேன்,

ஆமதாபாத், சிலோன் போன்ற வெளியூர்களிலிருந்து வந்துள்ள இயக்கத் தோழர்கள் வசதியின்மை யுற்றிருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது லட்சியத்துடன் விளங்க வேண்டுகிறேன்,

80,0000 மக்களைக் கொண்டு, நாம் நடாத்திய பவனியைக் கண்டு காமராசர் [illegible] நாளைய கனவு நிறைவேறிவிட்டது. இரண்டரை ஆண்டுகளுக்குமுன் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத நிலைமையிலே இருந்த நாம், இப்போது நமக்கென ஓர் மாளிகை; ஆம் நமது குடிசை வாங்கி விட்டோம்.

லட்சக் கணக்கான மக்களை நான்கு நாட்கள் தொடர்ச்சியாக, ஆர்வம் துளியும் கெடாமல் கூட்டிப் பார்க்கிறோம் நம்முடைய எதிர்காலப் பொறுப்பு அதிகம். பொறுப்பை நிறைவேற்றும் பொதுச் செயலாளர் தான் நமக்குக் கிடைத்திருக்கிறார் என்பதாகப் பேசினார்.

க. ஏ. மதியழகன்

அண்ணா அவர்களை வரலாற்றிலே இடம் பெறும் இந்தமாநில மாநாட்டின் தலைவராக இருக்கு மகத்தான வழி மொழிய உங்கள் முன்னிலையில் நிற்கிறேன் அறிஞர் அண்ணா அவர்களை இந்த மாநாட்டிற்கு தலைமை தாங்கச் செய்வதன் மூலம் அவருக்கு பெருமையைத்தேடித் தருகிறோம் என்றால் அதிலே அர்த்தமில்லை அவர் தலைவராவதன் மூலம் நம்முடைய பெருமையை அதிகரித்துக் கொண்டோம் என்றால் தான் சரியானதாகும் நம்முடைய நாட்டிலே வேறு எந்தக் கட்சி இடைக்காத ஈடு இணையற்ற மாவீரரை நாம் தலைவராக பெற்றிருக்கிறோம் இந்த மாநாட்டிற்குத் தான தலைவர் என்று அல்ல நம்முடைய இதயங்களிலே குடியேறி விட்ட ஒப்பற்ற தலைவர் அண்ணா அவர்கள் நாகரீகத்தின் தொட்டியாய் கலாச்சாரத்தின் பிறப்பிடமாய்-எழிலுள்ள ஏகாந்த நகரத்திலே வாழ்ந்த அறிஞர் அரிஸ்டாட்டில் சொன்னான் நான் கிரேக்க நாட்டில் பிறந்ததற்காக மகிழ்கிறேன் ஆனால் அதை விடப்பெருமைப்படும விஷயம் சோக்ரடீஸ் வாழ்ந்த தலைமுறையிலே நான் வாழ்ந்தேன் என்பது தான் அதேபோல இன்று இலட்சக்கணக்கான திராவிட வாலிபர்கள் தமிழ்நாட்டில்-திராவிட கலாச்சாரத்தின் மத்தியில் பிறந்ததற்காக மகிழ்கிறார்கள ஆனால் எல்லாவற்றிலும் மேலாக அறிஞர் அண்ணாவின் தலைமுறையிலே வாழ்வது தங்கள் பெருமபாக்கியம் என்ற இறுமாப்பும் பெருமையும் கொள்கிறார்கள அறிஞா அண்ணா ம[illegible] மத

அடைந்து விட்டோம் என்ற பேரிகையைப்பேரானந்தமுழக்கும் முரசொலி! (பலத்த கைதட்டல்) போலீஸ் படையினர் நமது பவனியைத் தொடர்ந்தனர். அவர்கள் புன்னகையுடன் பூரித்த நெஞ்சுடன் காணப்பட வேண்டிய அளவுக்கு, நாம் கண்ணமாகவும் கடமையுணர்ச்சியும் நடந்து கொண்டோம.

நமது குறிக்கோள்!

இந்த மாநில மாநாட்டினை நடத்திக் காட்டியதன் குறிக்கோள், பதவி வேட்டைக்குப் பால்வார்க்க அல்ல! அமைச்சர் பீடத்திலே அஹிம்சா அந்நிபாட அல்ல! காமராசரைப்போல காரில் உல்லாச சோலைகளுக்குச் செல்ல அல்ல, கோபால் ரெட்டியைப் போல, எம் எஸ் எஸ் இன்னிசைக்கு அடதாளம் போட அல்ல! வளர்த்த கழகத்தை வளமாக்கிய கழகத்தை மாசுபடியச் செய்தார் எது மாபெரும் தலைவர் கொள்கையினின்றும் வழுக்கி விழுந்தார், கண்ணீர் விட்டுக் கலங்கிய நேரத்திலே, நேசக் கரத்தை நீட்டி, நேர்மைப்பாதை இதோ நேரானந்தமாய்ச் செல் என்று வழிகாட்டினர் வளமார்த்த திராவிடம வருங்கால கனஞ்சியம், அறிவுப்படையல்ல அண்[illegible] பெற்ற திராவிட சமுதாயம் விடுதலைக் கொடியைப் பறக்க விட்டு தனித் திராவிடத்தைப் பெறவேண்டும் நிச்சயமாக அவர் தலைமையிலே சிந்தை தாயகம் உருவாகும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது

இந்த பொன்னான நல்வாய்ப்பை திராவிட சமுதாயம் இழந்து விடுமானல் அதைப் போன்ற துர்ப்பாக்கிய சமுதாயம் உலகிலே வேறு இருக்க முடியாது என்றென்றும் மீளா அடிமையில் திராவிடர் சிக்கிச் சீரழிவர் என்பதிலே சந்தேகமில்லை கடைசியாக மாபெருந் தலைவர் அவர்களே!

தங்கள் ஆற்றல் மிக்கத் தலைமையிலே விடுதலைப் போராட்டத்திற்காக, தங்கள் உயிர், உடல், உடைமை அத்தனையும் பணயமாக வைத்து-பிணமாவதனாலும் சரி தூக்குமேடை ஏறுவதனாலுஞ்சரி- சிறைச்சாலையில் சித்ரவதைக் காளாவதாயிருந்தாலும் சரி- ரத்தம் சிந்த வேண்டியிருந்தாலும் சரி அத்தனைக்கும் தங்களைக் காணிக்கையாக்கிய எண்ணற்ற லட்சக்கணக்கான திராவிட இளைஞர்கள்-வாலிபர்கள்- மாணவர்கள் துடித்துக் கிடக்கின்றனர். தங்கள் சீரிய தலைமையில் எங்களுக்கு திராவிடத்தில் எதிர்கால எழில் வாழ்வுக்கு வழி காட்டப்படும் என்றும் [illegible] திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சென்னை அண்ணாமலை ஆந்திரா, திருவனந்தபுரம், மைசூர்; பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் பலலாயிரக்கணக்கான மாணவர் சார்பில் மாநாட்டுக்குத் தலைமை வகிக்குமாறு பிரேரிபணையை வழி மொழிகிறேன்.

கே. ஆர். ராமசாமி

கலையின் மூலமாகவும் கருத்துக்களை பரப்ப முடியும் என்பதை செயலில் காட்டிய சிங்கம் நமது அண்ணா. இதோ இந்த மாநாடு எனக்கு ஒரு பூங்காவனமாகக் காட்சி தருகிறது இதிலே எத்தனை புது மலர்கள் பாட்டாளிப் பூக்கள்! இந்த தோட்டத்தைநிர்மாணித்தவர் அண்ணா தானே! அவர் தந்த தீபத்தைக் கையிலேந்திக் கொண்டு, அவரையே தூற்றிடும் குறைமதியினர் சிலர் கல்நதுறையிலே இருக்கிறார்கள். அவர்கள் விரைவில் திருந்துவார்கள்,

ரான நாம், கொள்கைக் கோட்டைகளான நாம் அவற்றைப் பொருட்படுத்தவில்லை! அழிவோம் என்று எண்ணிய அன்பர் பலர்! மாறாக, வளம் பெற்று வாழ்கிறோம். மாநாடு நடத்தி மண்ணரும் மன்னர்க்கும் மயக்கத்தைத் தந்துள்ளோம்! நமது மாநாட்டு நிகழ்ச்சி அரசியல் உலகுக்கே அறிவேட்டு.

எந்தக் கீழ்ப் போக்கினர் நமது செவ்வணை பறி கொடுத்தனரோ அதோ கோட்டைக் கருகிலே ‘அறிவகம்’ அமைத்துள்ளோம்-

கம்யூனிஸ்டுக் காலித்தனம்

தேர்தலிலே நிற்கும் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் தேர்தல் தேனைருசிக்க, நம்மிடம் வந்தனர். திராவிட நாடுப் பிரச்னைக்கு அடி கோலுவதாக இருந்தால் ஆதரிக்கிறோம். அதற்கான உறுதி தாரும் என்று அண்ணா கேட்டபோது ஆகட்டும் எனச் சொல்லி அப்பால் சென்ற பின் ‘திராவிட இனம், என்றே அகராதியில் இல்லை என்று நம்மைத் தூற்றத் துணிந்தனர் இழித்துரைக்க இச்சிந்தனர் நேசக்கரம நீட்டினோம் நேர்மைக்குவித்திட்டோம் நாம் காரணம் ‘அபயம் அண்ணா’ என்று அகவல் படியதால், ஆனால் நமக்கு அவர்கள் இனக்[illegible]

பணம் மூன்றெழுத்து—பணம் படைத்தவர்க்கு இருக்கவேண்டிய நல்ல குணம் மூன்றெழுத்து—குணத்திலே சிறப்பான அன்பு மூன்றெழுத்து—அன்பின் அடிப்படையான காதல் மூன்றெழுத்து--காதலில் தோன்றும் வீரம் மூன்றெழுத்து—வீரத்தை நிலைநாட்டும் களம். மூன்றெழுத்து—களத்திலே காணும வெற்றி மூன்றெழுத்து —வெற்றியைத் தேடித்தரும் நமது அண்ணா மூன்றெழுத்துக்களால் ஆனவா!

அண்ணா தான் நாம்! நாம் தான் அண்ணா! வெற்றிதான் அண்ணா! அண்ணாதான் வெற்றி பணபுரிக்குப் பணியாத படைத்தலைவன்—பதவியில் மயங்காத பகுத்தறிவுச் சியம்—லட்சியத் தென்றல்— துடிப்பத்தின் குளிர் முகச் செல்வன்...அண்ணா! அண்ணாதான் நம் வழிகாட்டி! அவர்தான் நம்தலைவர்! என்பதாக உணர்ச்சி மிக்க சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மனோகரன்

கைவொலிக்கிடையே தோழர் மனோகரன் இயக்க நிலைகள் குறித்தும், வேற்று நாட்டு வீரப் போர் குறித்தும் பேசி அண்ணாவின் தலைமையை விழைந்தார் விரிவுரை நிகழ்த்தினார்.

சம்பத்

திராவிடக் கழகத் தலைவரின் நியாயமற்ற போக்கைக் கண்டித்து கண்ணீர் சிந்தி வெளியேறிய நாம் மாற்றார் மலைக்கு மளவுக்கு எந்த அரசியல் கட்சி வரலாற்றிலும் இல்லாத இவ்வளவு பெரிய பந்தலில் லட்சக் கணக்கில் கூடியிருக்கிறோம். மாநாட்டின் தலைவர் அண்ணா அவர்களைப் பற்றி பேசிக் கொண்டேயிருக்கலாம். அவர் இல்லாத இடமேயில்லை தோழர் கே ஆர். ராமசாமி நடிக்கும் போது அந்த நடிப்பின் ஒவ்வோரு அசைவிலும் அண்ணா இருக்கிறார். நண்பர் கருணாநிதி எழுதும்போது வார்த்தைகளின் அடுக்கிலே அவர் வரிசிறைக்கும் வார்த்தை ஜாலங்களிலே ஆழ்ந்து நிற்கிறார் அண்ணா, நெடுஞ்செழியனின் வீரத்தமிழ் உரையிலே, நான் பேசுவதிலே முன்னணிப் படையினர் முழக்கத்திலே-எங்கெங்கு மறுமலர்ச்சி இருக்கிறதோ அங்கெல்லாம அண்ணா இருக்கிறார் என்று அழகுபட எடுத்து விளக்கினார் அரிய சொற்பொழிவு நிகழ்த்தி

[illegible]திரன், கொள்கையை விலைகூறாத வீரன் இலட்சியத்தை அடகுவைக்காத அறிஞன் அண்ணாதான் என்று குறிப்பிட்டார்

சிற்றரசு

கைவொலி கட்கிடையே எழுந்து அண்ணாவை, ரூஸோ என்றோ, லெனின் என்றோ, ஸ்டாலின் என்றோ அடைமொழி கொடுப்பதை நான் விரும்பவில்லை. அண்ணா, அண்ணாதான்! அவருடைய தலைமையிலே நாம் இதுவரை திராவிட நாடு கேட்டோம்; இனியும் கேட்போம். திராவிட நாட்டுக்கு விளக்கம் கூறியாகிவிட்டது. இனியும் விளக்கம் கூறும் வேலையில் ஈடுபடப் போவதில்லை. திராவிட நாடு நமக்கு வேண்டும் அவ்வளவு தான்! அந்த உறுதியான பிடிவாதத்துடன் போராட அண்ணாவின் தலைமையில் கூடுவோம் வாரீர் என்று கூவியழைத்தார்.

பெத்தாம் பாளையம் பழனிசாமி

அண்ணா, மாநாட்டுக்கு மட்டுமல்ல, எப்போதும் நம் தலைவர் தான் என்று ஆவேசமாகக் குறிப்பிட்டார்.

இரா. நெடுஞ்செழியன்

கைதட்டலுக்கிடையே முழக்கமிட்ட நெடுஞ்செழியன் அவர்கள் அண்ணாவின் அதியற்புத சாதனைகளை எடுத்துக்காட்டினார்.

“புலமை மிக்க சோமசுந்தர பாரதியார் அண்ணாவின் சொல்வீச்சிலே சோர்ந்து போனார். கம்பராமாயண ‘ஸ்பெஷலிஸ்ட்’ சேதுப்பிள்ளை அண்ணாவின் ஆணித்தரமான வாதங்களின் எதிர் நிற்க முடியாமல் உடல் நலமில்லையென்று கூறிவிட்டார். காஞ்சிக்கு வந்து கம்பராமாயணம் பற்றி வாதிடுகிறேன் என்று கூறிய சேதுப்பிள்ளை; ஏழு வருடங்கள் உருண்டு விட்டன—இன்னும் வரவில்லை. மாணவர் மனத்திலே எழுச்சி பண்ணுக, தொழிலாளர் வேதனை நீக்கும் தென்றலாக, திராவிடத்தின் உரிமைக் கொடி [illegible] ஒரே தலைவ[ர்] [illegible] அறிஞர் [illegible] புகழ் பாடுவோம்! [illegible] நடப்போம்!” என வீரப் பிரசங்கம் புரிந்தார். அத

தி. மு. கழக நடவடிக்கைகள்

குறிஞ்சிப்பட்டி:— 9-12-51 தி. மு. க. நிர்வாகக் கமிட்டி மணியன் வாசகசாலையில் தோழர் இராசரவணன் அவர்கள் தலைமையில் கூடி கீழ்காணும் முடிவுகளை செய்தது. அண்மையிலே சென்னையிலே நடைபெற இருக்கும் மாநில மாநாட்டிற்கு தோழர்கள் வெ. கிருஷ்ணசாமி, அ. குழந்தைவேலு ஆகிய இருவரையும்பிரதிநிதிகளாய் அனுப்பிவைப்பதெனவும். மற்றும் மாநாட்டுக்கு தீர்மானங்கள் 1. தேசவானாகளின் தூல்பங்கு குறித்தும் 2 உலகப் பொதுமறை திருக்குறளை உடனடியாக தக்க தமிழறிஞர் குழு ஒன்றை அமைத்து சரியான உரை நடையை எளிய நடையில் வெளியிட முயற்சி எடுத்துக்கொள்ளுமாறு மாநாட்டினரை கேட்டுக் கொள்வது என்ற இரு தீர்மானங்களையும செய்தது.

ஒரக்காட்டுபேட்டை :-4-12-51 அன்று மாலை 6 மணிக்கு ஒரக்காட்டுபேட்டை திராவிட முன்னேற்றக் கழகக் கமிட்டிக் கூட்டம் கூடி மாநில மாநாட்டுக்கென அங்கத்தினர்களை! கீழ்கண்ட முறைப்படி தேர்தெடுத்தனர் பிரதிநிதிகள் கு. மூ. இளங்கோ சோ. மூ. சம்மந்தன் ஆகியோரை கமிட்டி குழுமனதுடன் தேர்தெடுத்தது.

ஆலங்குடி:—7-12—51 வெள்ளிகிழமை மாலை 5-மணிக்கு ஆலங்குடி திராவிட முன்னேற்ற கழக சார்பில் கமிட்டிக் கூட்டம ராம. இதாம்[illegible] அவர் தலைமையில் கூடியது. சென்னையில் நடக்கும் திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டுக்கு பிரதிநிதியாக அனுப்புவதற்கு செயலாளர் மு. ராமசாமி அவர்களையும் விளம்பர உறுப்பினர் சோ. முத்தையா அவர்களையும அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டது.

பாலூர்தி: தி. மு. க. நிர்வாக கூட்டம் நடைபெற்றது. 1, மாநில மாநாட்டிற்கு இவ்வூர் செயலாளர் தோழர் பி. எஸ். இளங்கோ அவர்களை பிரதிநிதியாக தேர்தெடுக்கப்பட்டது, 2. நமது பிரிவினை திட்டத்தை ஒப்புக் கொள்ளுகிறவர் தவிர வேறு எந்த தனி நபருக்கும் ஓட்டு அளிக்கவோ, வேலை செய்யவோ கூடாது. 3. மதுரை தீர்மானத்தினை மனமார பாராட்டப்பட்டது.

திருக்களாச்சேரி:-4-12-51-ல் செயற்குழு கூடி மாநிலமாநாட்டு பிரதிநிதிகளாக தோழர் இரா. குஞ்சிதபாதத்தையும் சி. ஐம்புவையும் தேர்தெடுத்தது.

மு. தா. மோட்டுப்பாளையம்:—5-12-51-ம் தேதி இவ்வூர் தி. மு. க. செயற்குழு கூட்டம் இரவு 9 மணிக்கு தமிழர் நூல் நிலையத்தில் தோழர் ப. வை. சந்தியப்பன் தலைமையில் கூட்டப்பட்டது. அது சமயம் 1952-ம் ஆண்டுக்கு கீழ்கண்ட நிர்வாகிகளை ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது செயலாளர்: பி. ஏ. இராசு, உதவி செயலாளர்: க. து. கதிரேசன், பொருளாளர்: நா. இராமலிங்கம், வி. செயலாளர்: இரா. சேகநாதன் மற்றும் செயற்குழு உறுப்பினராக 12 பேர்களை நியமிக்கப்பட்டது கீழ்கண்ட தீர்மானங்களும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. ஏ. கே. வேலன் பொதுக் கூட்ட வரவு செலவு சமர்பிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. 17, 18-11-51-ல் மதுரையில் நடைபெற்ற பொது தீர்மானத்தை ஒப்புக் கொள்ளப்பட்டது. மாவட்ட பிரதிநிதிகளாக தோழர்கள் நடேசன், இராமலிங்கம் இவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டது. மாநில மாநாட்டுக்கு இவ்வூர் பிரதிநிதிகளாக தோழர்கள் பி. ஏ. இராசு நா. இராமலிங்கம இவர்களை அனுப்ப தீர்மானித்தது.

இராசிபுரம்:— தி. மு. க. செயலாளர், துணை செயலாளர் பொருப்பாளர் (திரு வி. சுந்திரம் எஸ். துரைசாமி பி. சின்னன் [illegible]ன்) முறையே தங்களுடைய [illegible]

இரண்டு [illegible] அண்டிய [illegible]

உணவு, உடை, வீடு முதலிய எல்லா விஷயங்களிலும் வடநாட்டுக்குக் காவடி தூக்க நேர்ந்திருக்கிறது! இது கூடாது! ஆகவேதான் வடநாட்டுப் பிடியிலிருந்து நாம் மீள வேண்டும். தனியாக திராவிடத்தில் வாழ வேண்டும்! நாம் கேட்பது பிச்சையல்ல நமது ஜீவாதார உரிமை: அதைப் பெற அண்ணா தலைமையில அறப்போர் ஆற்ற வேண்டும்! எண்ணற்ற தொல்லைகளைத் தந்த காங்கிரசை வீழ்த்த அடுத்த தேர்தலில் நாம முனிசிபல், சட்டசபைகளில் போட்டியிட வேண்டும. உணவு, உடை பஞ்சத்தால் எழுந்த மக்களின் வீரக்கனல் நம்முடைய அறப்பிரசாரத்தின் காரணமாகத்தான் அமைதியுற்றிருக்கிறது. அரிசியை இழந்து சோளம் கோதுமை, ஆகிய புளியங் கொட்டையில் வந்துள்ளது ஆகவே கட்சி மாற விரும்புகிறோம. வடநாட்டு ஆதிக்கம் நம் நாட்டில் தலை தூக்கக் கூடாது வட ஆதிக்கத் தூக்குக் கல்லறை எழுப்பியே தீர வேண்டும்! அப்பொழுது தான நம வாழ்வு மலரும! உலக அறிஞர், நாடுச் சரித வல்லுநர் கூறுத நமமை, மட்ட மதியுள்ள முன்சி நாகரிக மற்றவா அரிசி உண்பவா என்று கூறிவிட்டார்! இது நம எல்லோருக்கும இழிவு குமாரசாமி ராஜா முதல காமராசர் வரையில் நாம பார்ப்பனத் வேஷிகள அல்ல! [illegible] காட்டி நம்மைச் சுரண்டும் மதயினத்தைத் தான் நாம் வெறுகிறோம கடவுள் பேரால், பரம

மூவலூர் அம்மை

ராமாமிர்தத் தம்மையார் அவர்கள் அண்ணாவை வாழ்த்தி.

4-ம் பக்கம் பார்க்கவும்

வழி மொழிந்தார்கள்.

அண்ணா

பந்தலிலே நிரம்பி வழிந்த மக்கள் கூட்டம மகிழ்ச்சி முரசம ஒலித்திட, வான் முட்டும கை ஒலி கிளம்பிட, பதின் மூன்றுக்கு பேற்பட்ட மாவட்டத்துச் செயலாளர்கள வணக்கம தெரிவித்து, அழகான மாலைகளை அணிவித்திட, அண்ணா தலைமை ஏற்றார்கள். (சொற்பொழிவு பின்னர்)

திரைப்படம்

அன்றைய மாநாட்டு நிகழ்ச்சிகள முழுதும் திரைப்படமெடுக்கப்பட்டது.

[இ]ந்திய சர்க்கார் முடிவு

பம்பாய், டிச 14— இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு உயர்ந்த பட்சமாக ரூ 50 வரை பணம் அனுப்ப அனுமதி அளிக்க இந்திய சர்க்கார் முடிவுசெய்திருப்பதாக இந்திய கெஜட் அறிக்கையொன்று கூறுகிறது தற்போது பணம் பாங்கிகள் மூலமே அனுப்ப அனுமதிக்கப்படும் இரு நாடுகளுக்குமிடையே மணி ஆர்டர் போக்கு வரத்து ஆரம்பித்து விட்டால் தபால் ஆபீஸ்கள் மூலமாகவும் பணம் அனுப்புவது அனுமதிக்கப்படலாம். [illegible]ர்.

ஸாபூ பிரிட்டிஷ் பிலிமில் நடிப்பார்

லண்டன், டிச 16— இப்போது ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள சர்க்கஸ் வேலை முடிந்ததும் பிரபல இந்திய நடிகரான ஸாபூ ஒரு பிரிட்டிஷ் படம் ஒன்றில் நடிப்பார் என்று தெரிகிறது.

அவர் சர்க்கஸில் நடிப்பதற்காக வாரம் ரூ 39000 சம்பளம் வாங்குகிறார்.

பரையின் பேரால், ஜாதிமதத்தின் பேரால் சுரண்டுவதைத் தான் நாம் வெறுக்கிறோம்! வேரறுக்க வேகமாக முன்னேறுகிறோம்!

வெள்ளையர், ஆட்சியில் 16 அவுன்ஸ் இப்போது 6 அவுன்ஸ் ராமராஜ்யத்திலா இந்தக் கேவலப் போக்கு இழிநிலை பஞ்சப் பல்லவி தொழில் வளத்தைச் சர்க்கார் ஏற்று நடத்த வேண்டும. தனிப்பட்டவர் வசதி பெற, லாபம் பெற சர்க்கார் அனுமதிக்கக் கூடாது! அதற்கு மாறாக, முதலாளித்வத்துக்கு வால்பிடிக்கிறது காங்கிரஸ்.

ஆகவே அதை ஒழிக்க நாம் திரளவேண்டும தேசியப் போரிலே, சுதந்திரத்துக்கு உயிர் நீத்த குமரன், வள்ளியம்மை பிறந்த நமது நாட்டிலே இன்னும் அடிமைத்தளை இதை அகற்றி, திராவிடநாட்டை அண்ணா தலைமையில் பெறுவோம, வாரீர் - வாரீர் திராவிடரே தீரரே தினரே, திறமையாளரே நக்கெட்டிலும் வெற்றி நடைபோட்ட மூமன்னர் பரம்பரையின் முத்துக்குவியல்களுக்கு என்று அழைக்கிறேன் எனக் கூறி அண்ணாவை தலைமைதாங்க வேண்டுமென முன்மொழிந்தார்.

காலகதி அடைந்த கடவுள் கூட்டம்

மண் சாணி செங்கல் கருங்கல் கடவுள்கள்

(o)

வைதிகம் இனி வாழமுடியாது

தோழர் அன்பழகன் பேச்சு

அன்புள்ள அவைத் தலைவர் அவர்களே; எழுச்சி மிக்க இளைஞர்களே; தாய்மார்களே! வல்லரசின் வீழ்ச்சி, நாட்டுப் பிரிவினை விஞ்ஞான வளர்ச்சி உரிமைப் போராட்டம் முதலிய அரிய பல சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தீர்கள் இப்பொழுது நான் மாஜி கடவுள்களை உங்கள் முன் அழைத்து வருகிறேன்.

ஆண்டவனைக் கண்டவர் இல்லை. இல்லாதவரை அழைத்து வரவும் முடியாது. எனினும் அழைத்து வருவேன் உங்கள் மனக் கண்ணின் முன்னால் மந்திரிகள், வைஸ்ராய்கள் தாம் மாஜியாவார்கள் என்றால் மனிதனுக்கு முன் உண்டாகி, மனிதனுக்குப் பின்னும் நிலைத்திருக்கக் கூடிய கடவுள்கள் என்று சொல்லப்படும் தெய்வங்கள் கூட மாஜிகளாகி விட்டன. நினைத்ததெல்லாம் செய்யக் கூடிய கடவுள் வரலாற்றைப் படித்துப் பார்த்தால் பல மாஜிகளைக் காணலாம். [நாகரிகம் மிகுந்திருந்த திராவிடத்தில் மட்டுமல்ல மேனாட்டிலும் ஏராளமான மாஜிகள் உண்டு அங்குள்ள பட்டியலைப் பார்த்தால், இன்ன காலத்திலே இன்ன தேவன் இருந்தான்- வெற்றியுடன், பின்னொரு காலத்தில் புதைந்து விட்டான் தோல்வியுடன் என்பதை அறிய முடிகிறது.

இந்நாட்டிலே, பன்றி எலி நாய், பாம்பு, எல்லாம் கடவுள்கள்! கருடன், மயில் கூட, கடவுள்கள்! சுயமரியாதை சார்பிலே மறுக்கு நாம் இவைகளைக் கடவுளாகக் கருதமுடி[யா] [...] மனிதன் அறிவை மதிக்[...] பழகினுல் என்றுல் இல்லை [...] இயம்பிவிடலாம் போலத் [...] கையும், நல்ல நம்பிக்கையையும் காணும் நேரத்தில் அவர்களுக்கிருக்கும் சந்தேகம் தீர்ந்து விடும்

நீங்கள் என்னிடத்தில் வைத்துள்ள அன்பு எனக்கு நன்றாகத் தெரியும் "கடமையைச் செய்கிறோம் கட்டளையிடுங்கள்" என்று என்னைத் தலைமைபீடத்திற்கு அழைத்த வழிமொழிந்தவர்களுள் ஒருவர் கூறினார். நான் கட்டளையிடுபவனல்லன் கட்டளையிடும் பணி நம்முடையதன்று அது முதலாளி மனப்பான்மையாகும். நான் வழி காட்டவேண்டும் என்று கூறுகின்றீர்கள். நான் வழி காட்டியுமல்லன். அதன்வழிக மனப்பான்மையாகும் கட்டளையிடுவதோ வழி காட்டுவதோ என் வேலையல்ல நாம் நம் இலட்சியத்தை அடைய ஒரு பாதை அமைக்கிறோம். நம்முடைய வேலை பாதையமைப்பது தான். அந்தப் பாதையைச் செப்பமாக அமைக்கவே அன்புடன் உங்களை அழைக்கிறேன் நமக்கு நெருக்கடி ஏற்படுமேயானால் எல்லாம் சிதறுண்டு விடாமல் ஒன்றுபட்டு நம் இலட்சியத்தை அடைய நாம் வகுக்கும் பாதையை வெற்றிப் பாதையாக்க வேண்டுமென்றே அன்பு கொண்டு உங்களை அழைக்கிறேன்.

2 ஆண்டுகளுக்கு முன் நமக்கு ஏற்பட்ட நெருக்கடி மிக்கநேரத்திலே நான் சொன்ன வார்த்தைகளை நம்பி என்னிடத்தில் பாசம் அன்பு-பற்று வைத்து என்னோடு ஒத்துழைத்து, இன்று இவ்வளவு பெரிய வெற்றியை ஏற்படுத்திக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் என் நன்றியைச் செலுத்துகிறேன் இதை நினைக்கண்டு நான் பூரிப்படைகிறேன்,

இந்த நம்முடைய ஆர்வம் வீணாகப் போகாமல், இதை ஏற்ற வகையில் எதிர்காலத் திட்டம் ஒன்றை அமைத்து அரசியலில் வெற்றி காண்போம் இந்த கூட்டு ஆர்வத்தை நாம் நல்ல வழியில் பயன்படுத்துவோம். நம்மிடம் கட்டளையிலலை வழி காட்டுவதில்லை உலகத்தில் கட்டளையிடும் தலைவர்கள் தோன்றக் கூடாது.

நான் உங்களனைவரிடமும் கருத்துக் கேட்கிறேன். என் கருத்துக்களைக் கூறுகிறேன். நாம் அனைவரும் கலந்து பேசுகிறோம். ஒரு நல்ல முடிவுக்கு வருகிறோம். நமக்கு முக்கியமாக வேண்டியது ஆற்றல்; எடுத்த பணியினைச் சிறப்

வனைக் கற்பித்தார்கள், "ஏ! கருங்கல்லே! கடவுளே! நீ கரையாமல் இருப்பாயாக" என, ஆண்டவனை வேண்டி ஆசிர்வதித்தனர் இந்தக் கல்லின் சிலையிலே நாய், புள்ளினம் முதலியவை அசுத்தம் செய்வதை உணர்ந்து அக்கல்லுக்குப்பாலாபிஷேகமும், தேனபிஷேகமும் செய்தனர். பிறகு ஆண்டவனுக்குக் கண், காது, மூக்கு, வாய் முதலிய உறுப்புக்கள் உண்டாக்கினர்.

இம்மாதிரியாக சிவலிங்கம் நடராஜனானார் நடராஜன் பார்வதியானார். பார்வதி பரமேஸ்வர சிவன் சக்தி சேஷ்டையினாலே பிள்ளையார் பிறந்தார்! பாடல்களியற்ற உடுமலைக்கு எப்படி எளிதாக வருகிறதோ அப்படியே இந்த வைதிகர்களின் கற்பனையும் தாராளமாக உதித்துக் கொண்டிருந்தன மண் மறைந்தது, அருகம்பில் அழிந்தது, கல் உடைந்தது, சிவலிங்கம் பிள்ளையாரானது இப்படியே கடவுள்கள் மாஜிகளாகிக் கொண்டிருந்தனர். இக் கல்லுக் கடவுள்கள் எத்தனை முறைகளில் செதுக்கப் பிழைப் பார்? [...]த்திலாவது ஒரு ஒற்றுமையைப் பார்க்க முடிகிறதா என்றால் இல்லை. ரவி வர்மா எழுதிய லக்ஷ்மியின் படம் ஒரு விதம் மாதவம் பிள்ளை எழுதிய படம் மறு விதம் சரஸ்வதியை ரவி வர்மா எழுதிய ரகம் தனி மற்றும் பலர் தீட்டிய விதம் வேறு எந்த ஓவியன் வரைந்தாலும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டே காணப்படும். காரணம் குறிப்பிட்ட ஒருவரும் இல்லாததேயாகும். இதைப் போலவே ஆண்டவனை, பிர்மா, சிவன் எனப் பலவாறு அழைக்கின்றனர் தெளிவான ஒரு உருவ[...] யைத் [...] அதன் பிறகு, திராவிடப் பெருமக்களின் ஒத்துழைப்பால் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இந்த மறுமலர்ச்சி [...]லை தொரு பெரிய ஆர்வத்தைத் திராவிடப் பெருமக்களிடையே உண்டாக்கி வைத்து விட்டது. நாயர், செரியார் ஆகியோர் இந்த நல்லார்வத்தைத் தந்திராவிடில் நாம இந் நிலை அடையமுடியாது.

தோழர் ஜீவானந்தம் என்னுடைய நண்பர். அன்பும் ஆர்வமும் கொண்டவர் நம் இயக்கம் பெற்றெடுத்த பிள்ளை. அவர் மாட்டு நமக்குப் பேரன்பு உண்டு ஆனால் தோழர் ஜீவானந்தமும் நானும் இன்று வேறு வேறு முகாம்களில் இருக்கிறோம் பெரியாரும் நானும ஜீவானந்தமும் ஒரே இயக்கத்தில கூடி நின்று நம்நாட்டிலே பணியாற்ற வேண்டும் அதனையே நானே நான் எதிர்பார்க்கிறேன். எவர் வரினும் அவரோடு சேர்ந்து உழைப்பதாயினும் எந்நிலையிலும் எக்காரணம் கொண்டும் கொள்கைகளை நான் விட்டுக் கொடுக்கமாட்டேன். கொள்கை காரணமாகவே நாம் ஒரே தனி முகாம் அமைத்திருக்கிறோம் இவ்வாறே முகாமில் ஒன்றுபட்டு உழைக்க அனைவரையும் அழைக்கிறோம் இங்கே உள்ள அனைவரையும் ஒரே முகாமில்திரட்டி நாம் முழுப் பொறுப்பு எடுத்துக் கொண்டு உழைக்க அழைக்கிறேன் பொதுமுகாம் அமைப்பதாகக் கூறும் மயக்கு வார்த்தைகளைக் கண்டு மருளமாட்டேன் சமதர்மப் பேச்சுக்களைக் கண்டு அஞ்சிடமாட்டேன் பொது உடைமை என்று கூறுவதைவிட, திராவிடப் பொது உடைமை என்று கூறட்டும் அதில் முதல் அங்கத்தினன் நான் திராவிடச் சமதர்ம முகாம் என்று கூறட்டும் அதில் முதல் அங்கத்தினன் நான் திராவிடப் புரட்சிக் கட்சி என்று கூறப்படும் அதில் முதல் வனாக இருப்பவன் நான். அப்படியில்லையென்றால் ஒரு பொது முகாம் என்பதில் பொருளில்லை நம் தனி முகாமுக்கு அனைவரும் வரட்டும் ஒன்று பட்டு முழுப் பொறுப்பேற்று உழைக்கலாம், வேறு வேறு முகாமகள் ஏற்படுத்திக் கொளவது குறைய வேண்டும் ஒரே திராவிடத் தனி முகாம் ஏற்பட வேண்டும் இது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய நோக்கம்.

சர் தியாகராயருக்குப் பின் நம் இயக்கத்தை இன்றுள்ள இம்மகத்தான நிலைக்கு வளர்த்த

மாறி முல்லைத்தலைவன் மாயுகின் எங்கே வருணன் எங்கே? மறைந்து விட்டனர் மாஜிகள்.

இனி ரோம், கிரேக் முதலிய மேனாட்டிற்கு அழைக்கிறேன். அவ்விடத்து மாஜி கடவுளரின் பட்டியலைக் காட்ட அங்கே, அப்போலோ, அமாண்டா, ஜியோலஸ், இயூரிக்வானர், ஹிமலர், ஜினோ, ஜூபிடர், இரேனப்பற்பல தெய்வங்கள் இருக்கின்றன. இவர்கள் காட்சி தருவது பூஜைக்குப் பிறகல்ல; அவ்வூர் கண்காட்சிசாலையில் புகுந்தாலதான் இந்தக் கடவுள்கள் அத்தனைப் பேரும் அழிந்துமாஜியாகி விட்டனர் எத்தனைக் கடவுள்? உழவுக்கு ஒரு கடவுள் அதை உருவாக்க வேறு கடவுள். காமத்தைக் கிளற ஒரு கடவுள் அதைக் கட்டுப்படுத்த வேறு கடவுள் அழிவுக்கு ஆளான கடவுள் அனந்தம் அங்கே கதைக்கு ஆளான கடவுளுக்கும் குறைவில்லை அங்கே தன் சொந்த தங்கையை மணந்தான் ஜூபிடர் என்ற கடவுள் தந்தையைக் கொன்றான் கடவுள் பாட்டன் பாட்டி பரம்பரையுள்ளவன் கடவுள். இப்படி அங்கு இருளும் குழப்பமும் அதிகமாக இருந்ததால கடவுள பிறக்காமல இருக்க முடியவில்லை போலும்! பூமியும வானும புணர்ந்ததாம்! புராண் பிள்ளை பிறந்ததாம இம்மாதிரியான மூடப்பழக்க வழக்கங்களை—கடவுள் பட்டியலைக் குறைக்க சாக்ரட்டீஸ் தோன்றினான். ஆதரவில்லாமல் அலைக்கழிக்கப்பட்டான். பிறகு விஷம் கொடுத்து வீழ்த்தப்பட்டான் பகுத்தறிவு பரவும வரையில் கடவுள் கும்பல் ஓங்கியிருந்து பிறகு மெல்ல மெல்ல மறைந்து மாஜிகளாயின [...]

உங்களிடையே எழும வீரக் கனல்; இவ்வளவு மகத்தான மாநாட்டை, வீரர் கூட்டத்தை நாமா கூட்டினோம். நம்மாலா இவ்வளவு பெரிய கூட்டத்தைக் கூட்ட முடிந்தது. அவசர அரசியல் ஆருடக்காரர்களின் சோதிடம் பொய்த்தே போய்விட்டது. நெஞ்சிலே உரமும் நேர்மையிலே மற்றும் நமக்கிருக்கிறதென்பதை இந்த மாநாடு மெய்ப்பித்துவிட்டது. இங்குள்ள வர்களாகிய நீங்கள் திராவிடத்தின் திக்கெட்டிலும் வந்திருக்கின்றீர்கள். உங்களுடைய உற்சாகம், கொள்கைப்பற்று, ஆர்வம், உணர்ச்சி முதலியவை அவசர அகராதிகளை அனுபவ அகராதியாக்கி வைத்துவிட்டது இங்கே நீங்கள் திக்கெட்டிலிருந்தும் வந்திருக்கின்றீர்கள் என்பதைக் காட்ட உங்கள் கொடிகள் பறக்கின்றன. குன்று

[...]ரும் [...] கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்த மகத்தான சாதனையைக் கண்டு சிலர் மலைக்கின்றார்கள். சிலர் சந்தேகம் கொள்ளுகிறார்கள்; பலர் பூரிப்படைகின்றார்கள். இந்த எழிலுருவம் கண்டு, இந்த எழுச்சியைக் கண்டு, நம் இயக்கம் இத்தகைய வடிவு எடுத்திருப்பதைக் கண்டு நாம் பூரிப்படைகின்றோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் யாருக்கும் வைரியல்ல. கடம் அற்றவருக்கு, நாட்டுப் பணியைக் கடமையில்லாமற் செய்ய விரும்புகிறவர்களுக்கு மக்கட் பணியாற்ற விழைகின்றவர்களுக்குத் தி. மு. க. அரியதோர் முகாமாகும் சிறந்த பாசறையாகும் இந்[த] அரியதோர் சாதனையிக்கல[...]தொண்டாற்ற வாரீர் என்[...]வர் ஜீவா [...]

இரத்தம் சிந்திய எல்லை. அதுவே திராவிட எல்லை. இது 10 மைல் கூடினாலும் அல்லது 10 மைல் குறைந்தாலும் அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் நமக்கென்று ஓர் எல்லை இருக்க வேண்டும் A home Land for our nation என்பதற்கொப்ப நமக்கென்று ஓர் எல்லை இருந்தல வேண்டும். அதுவே திராவிட நாட்டு அமைப்பாகும் அதுதான் நமது அடிப்படை இலட்சியமாகும. இந்த இயாந்தலட்சியத்திலே நமக்கு நம்பிக்கை வளரவே, நாம் இன்று இவ்வாறு திரண்டு கூடியிருக்கின்றோம். இந்தச் சமயத்திலே தேர்தல பிரச்னை வந்து விட்டது அதனையும நாம கவனிப்போம். ஆனால நம பாதையிலே தான் சென்று கொண்டிருப்போம். இடையில் வரும இத்தகைய பிரச்னைகளைக் கவனிக்காமல் இருக்கமாட்டோம். ஆனால நம பாதையிலிருந்து நழுவமாட்டோம். நமது உயிர்ப்பிரச்னையை மறக்கமாட்டோம். வெயிலிலும பனியிலும நாம நம் பாதையில முன்னேறிச்சென்று கொண்டே இருப்போம். நம பாதையில ஓநாய்கள வட்டமிடலாம்; நரிகள ஊளையிட்டாய பிணங்கள விழுந்து கிடக்கலாம்; எலும்புத் துண்டுகள் காட்சிதரலாம இவையனைத்தும நம முன்னால் உள்ள அடிச்சுவடுகளேயாம. நமக்கு ஊதப்புணர்ச்சியை உறுத்தும சாதனங்களேயாம. எனவே, நம பாதையில நாம சென்று கொண்டேயிருப்போம். நம பயணத்தை எதுவும் கிழித்திடாது. நம அடிப்படைக் கொள்கையை, நம உயிர்ப் பிரச்னையை, திராவிட நாடு பெறுவதை நாம எக்காரணம் கொண்டும் மறக்க மாட்டோம். திராவிட நாட்டைப் பெறுதே தீருவோம என்ற உங்கள் உணர்ச்சியைக் கண்டு நான பூரிப்படைகிறேன்.

தொடரும்



தி. மு. கழக கிளைகள்

போடிநாயக்கனூர்:- தீர்மானம் விபரம் "தேர்தல் சம்பந்தமாக: மாநில மாநாட்டுக்குச் செல்லும் நம் பிரதிநிதிகள் பொதுச் செயலாளரைக் கண்டு நம் (உத்தமபாளையம்) தொகுதியிலுள்ள அபேட்சகர்களின் நிலைமைகளை விளக்கிச் சொல்லி, பொதுச் செயலாளர் சொல்லும் வழியைக் கழக மூலமாக நடத்திக் கொள்ளுவதென்றும், அதுவரை நம் கழகம் எந்த விதமான அபேட்சகரையும் ஆதரிப்பதில்லை என்றும் கூட்டம் ஏகமனதாகத் தீர்மானிக்கிறது"

அருப்புக் கோட்டை:— 8-12-51 இரவு 9 மணிக்கு திராவிட வாலிபர் சங்கத்தில் தோழர் பெரியசாமி தலைமையில் கூடிய தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில் சென்னையில் நடைபெறவிருக்கும் மாநில மாநாட்டிற்கு தோழர்களான பி. எம். சின்னசாமி, நசி. சு. சி. சங்கரலிங்கம் ஆகியவர்களை கழகப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் மதுரையில் நடைபெற்ற பொதுக்குழுத் தீர்மானங்களை வரவேற்கிறதென்ற தீர்மானமும் நிறைவேறியது.

மோகனூர்:- 4-12-51 இரவு 8-மணிக்கு தி. மு. கழக கட்டிடத்தில் புது தேர்வு நடைபெற்றது அச் சமயம் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். செயலாளர் பி. ராதா கிருஷ்ணன், உதவி செயலாளர் ஆர் எம் குருசாமி பொருளாளர் வி பரமசிவம், நிர்வாக உறுப்பினர் ஆர். ராமசாமி, கமிட்டி உறுப்பினர்கள் ஆர். மருதமுத்து, எம் எ கருப்பையா, கே கோவிந்தன், எம் வேலு டி ராசு.

பனப்பாக்கம்:— 6.12.51 வியாழன் மாலை 6 மணிக்கு தோழர் சே. கோ. பெருமாள் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைப்பெற்றது. அது சமயம் தோழர் காஞ்சி வே முருகேசன் பகுத்தறிவு பாடல்கள் பாட கூட்டம் ஆரம்பமானது. தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் பொதட்டூர் டி. கணபதி, கே. டி எஸ் மணி, வி எம அண்ணாமலை "திராவிட நாடு" துணை ஆசிரியர் தோழர், இராம அரங்கண்ணல் முதலியோர் [...] உரையாடல்,

வாழைப் பழத்துக்குமா விற்பனை வரி?

......

விலக்களிக்கப்பட வேண்டும்

சென்னை, டிச 15—

"எல்லாப் பழங்களிலும் வெகு இலகுவாக அழுகிப் போவதும், கெட்டுப் போய் விடுவதும், ஏற்றுமதி இறக்குமதி செய்வதில் மிகக்கடினமாய் உள்ளது வாழைப் பழம் வர்த்தகம். இந்த வியாபாரத்தினால், வியாபாரிகள் பணம் இழக்க நேரிடுகின்றதே ஒழிய லாபம் சம்பாதிக்க முடிவதில்லை, இத் தொழில் நம் ராஜ்யத்தில் வரும் காலத்தில் நீடித்திருக்க வேண்டுமென்றால் சென்னை சர்க்கார் இதை விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று சென்னை வாழைப் பழம் வியாபாரிகளின் சங்கத்தின் தலைவர் எஸ். கல்யாண சுந்தரமுதலியார் கூறினர்.

டில்லியிலும், நம் நாட்டிலுள்ள இதர ராஜ்யங்களில் இத் தொழில் விற்பனை வரியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது. என் சென்னை சர்க்கார் மட்டும் இதற்கு விற்பனைவரியை சுமத்தியுள்ளனர் என்று கல்யாண சுந்தர முதலியார் மேலும் கூறினார்.

அவர் கூறியதாவது:— இதர வர்த்தகத்தைப் போல் வியாபாரி இந்த வரியை பொருள் வாங்குகின்றவர்கள் தலையில் சுமத்துவதில்லை. இந்த வரி மிக மிக விசித்திரமாக அமுல் நடைபெறுகிறதென்பதற்குச் சான்று ஒரே வியாபாரி மூன்று இடத்தில் விற்பனை வரி அளிக்கவேண்டியதாயிருக்கிறது இத்துடன் பழம் எந்த நிலையில உள்ளது என்பதை கவனித்து வியாபாரி அதற்கேற்பன வாறு தன் விற்பனை விலையை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிருக்கின்றது.

வியாபாரிகளுக்கு மற்றொரு கஷ்டம் ரயில்வே கட்டணம் செலுத்துதல். இதர பொருள்களைப்போல் இல்லாமல் இதை ஏற்றுமதி செய்வதற்கு மட்டும் ரயில்வே அதிகாரிகளுக்கு முன் பணம் செலுத்த வேண்டும்.

வாழைப்பழம் தென்னிந்தியர்களுக்கு எவ்வளவு முக்கியமான பொருள் என்பதற்குச் சான்று அது நமது மத விஷயங்களிலும், [...]

பிறக்காத குழந்தைக்கு அங்கஹீனம்

22400 பவுன் நஷ்ட ஈடு அனுமதி

நியூயார்க், டிச 15—

பிறக்காததற்கு முன்பே கருவில் அங்கஹீனம் அடைந்த குழந்தைக்காக நஷ்ட ஈடு 22,400 பவுன் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஓட்டை ஒடிசலான மாடிப்படியில் கர்ப்பிணிஸ்திரீ ஒருத்தி கையில் படி ஒடிந்து விழுந்து விட்டாளாம் அப்பீல் கோர்டும் இந்த நஷ்ட ஈடு தொகையை ஊர்ஜிதம் செய்துவிட்டது.

......

சென்னை ராஜ்யத்திற்கு 231 டன் அரிசி

சென்னை, டிச, 15—

எஸ் எஸ். ஷாஜஹான் கப்பலில் பர்மா ஹூன்ஸோன் என்ற ஒரு ரக அரிசி வந்ததில் 1,000 டன் மைசூருக்கு கடனாகக்கொடுக்கப்படும் என்றும், மிஞ்சிய 231 டன் அரிசியை சென்னை ராஜ்யத்திற்கு ஒதுக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

ஒரு நெருப்புக்கோழி முட்டைக்கு 11998 டாலர்

நியூயார்க், டிச. 15—

கோடீசுவரா ஜேம்ஸ்ரியான் என்பவர் 11,998 டாலர் கொடுத்து ஒரு நெருப்புகோழி முட்டையை வாங்கியிருக்கிறார் 300 வருஷமான இமமுட்டை வெள்ளி பீடத்தின் மீது பொருத்தப்பட்டுள்ளது.

ஜவஹர்லால்நேரு ஒரு ரேடியோ பிரசங்கத்தில நம் நாட்டில மக்கள் அரிசியையும், கோதுமையும் முக்கிய உணவாகக்கொள்கின்றனர்.

இத்துடன் சிறந்தணவாக வாழைப்பழமும் அல்லது பருப்பு வகைராக்கள் அல்லது மரவள்ளிக்கிழங்கு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவர் வற்புறுத்தியுளளது ஞாபகமிருக்கலாம இத் தொழிலைக் கொண்டு ஜீவனம் செய்கின்றவர்கள் பரம ஏழை மக்கள் தான்.

இதிலிருந்து சென்னை சர்க்கார் ரூ 300,000 [...] பெறுகின்றனர். விற்ப[...] கொண்டுவரலாம்.

(5) இருதரப்பு பிரதிநிதிகளை சம அளவில் கொண்ட ஒரு ராணுவ கமிஷனை அமைக்க வேண்டும் அது போர் நிறுத்த அமுலைக் கண்காணிக்கும்.

(6(போர் நிறுத்தத்தை மேற்பார்வையிட நடுநிலைமை நாடுகளின் பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு ஸ்தாபனத்தை அமைக்க வேண்டும்.

கொரியாவில் கம்யூனிஸ்ட் விமான பலம் அபாயகரமாய் அதிகரித்திருப்பதாக ஐ. நா. தரைப்படை தளபதி ஜெனரல் பிளீட் உட்பட பல ஐ நா அதிகாரிகள் கூறுகின்றனர். புதுரக ரஷ்யஜெட் விமானங்களைக் கம்யூனிஸ்டுகள் உபயோகிப்பதாகவும் அவற்றைச் சமாளிப்பது கஷடமாய் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இன்று நடந்த விமானச் சண்டையில் ஒரு கம்யூனிஸ்ட் விமானம் வீழ்த்தப் பட்டதாகவும், நாலுபேர் சேதமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஆண்கள் கல்லூரியில் பெண்கள்

[...]க்கழக விதி செல்லாது

[...], டிச, 15—

ஆண[...] கல்லூரிகளில் பெண்க[...] சொன்னாலென்றும் அவ[...] சேர்த்துக்கொள்ள மறுப்பது அரசியல்சட்டத்திற்கு முரணானது என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

உடுப்பி மகாத்மா காந்தி மெமோரியல் கல்லூரியில் தம்மைச் சேர்த்துக் கொள்ளும்படி சென்னை பல் கலைக்கழகத்துக்கும் மேற்படி கல்லூரி பிரின்சிபாலுக்கும் உத்தரவிடுமாறு சாந்தாபாய் என்ற மாணவி ஹைகோர்ட்டில்ஒரு மனுதாக்கல் செய்திருந்தார். இம்மனுவை அனுமதது நீதிபதி சுப்பராவ் தீர்ப்பு கூறினார்.

எஸ்.எஸ். எல். சி. தேறியுள்ள மேற்படி பெண்தம்மை இண்டர்மீடியட் வகுப்பில் சேர்த்துக் கொள்ளக் கல்லூரி பிரின்சிபாலுக்கு மனு செய்து கொண்டிருந்தார், கல்லூரியில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று பல் கலைக்கழக அதிகாரிகள ஒரு விதி ஏற்பாடு செய்திருப்பதால அவரை சேர்த்துக்கொள்ள பிரின்சிபால் மறுத்துவிட்டார். இவ்விதம் மறுத்ததை ஆட்சேபித்து மாணவி உயர்நீதி மன்றத்தில மனு தாக்கல் செய்தார்.

அரசியல் சட்டத்தின் கீழ் தமக்களிக்கப்பட்டுள்ள மூலாதார உரிமைக்குஇதுமுரணானது என்றும பெண் என்பதற்காகத் தம்மைச்சேர்த்துக்கொள்ளாதிருக்கக் கூடாதென்றும அவர் வாதித்தார்.

பல்கலைக் கழகம் தமக்கு அனுமதி கொடுத்தால மனுதாரரைச் சேர்த்துக் கொள்வதில தமக்கு ஆட்சேபமில்லையென்று பிரின்ஸிபால் கூறினர்.

இண்டர்மீடியட் வகுப்புகளில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளக்கூடாதென்று பல்கலைக் கழகம் நியமித்துள்ள மேற்பார்வை கமிஷன் சிபார்சு செய்திருக்கிறதென்றும் இச் சிபார்சை செனேட் ஆமோதித்திருக்கிறதென்றும் எனவே பல்கலைக் கழகம் தனிச்சையாக இதைச் செய்யவில்லையென்றும [...]ாதித்தது.

[...]ண் பெண் பாகுபாடில்லா[...]

[...]பெற்ற மாணவர்கள் அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்ய இந்தியாவிலுள்ள அமெரிக்க கல்வி ஸ்தாபன நிர்வாகக் காரியதரிசிக்கு 1952 ஏப்ரல் 15-ந் தேதிக்குள் மனு செய்து கொள்ள வேண்டும்.

அமெரிக்காவில் தங்கும் ஒவ்வொரு வருஷத்துக்கும ரூ 8000 செலவு செய்ய தங்களுக்குப் போதிய நிதி இருக்கிறது என்று மாணவர்கள் அத்தாட்சிப் பத்திரம் அனுப்பவேண்டும்.

....

காமின் பார்ம் விமானபலம் இரட்டிப்பு

வியன்னா, டிச 16—

சென்ற வருஷத்தில் ரஷ்யா க.மின் பார்ம் விமான பலத்தை இரட்டிப்பாகப்பெருக்கிவிட்டது என்று இங்குத் தகவல் கிடைத்துள்ளது.

ரஷ்யா ஆதிக்கத்திலுள்ள 6 நாடுகளில் 2200 விமானங்கள் தற்போது உள்ளன இவைகளில் சுமார் 100 ரஷ்ய ஜெட் விமானங்களாகும்.

ரேஷனில் நாற்ற அரிசி

......

கரூர், டிச, 15—

கரூர் ரேஷன் கடைகளில் சில தினங்களாக மோசமான அரிசி விநியோகிக்கப்பட்டு வருகிறது. அந்த அரிசி நாற்றமடிக்கிறது.

புதிய வெளியீடுகள் !

மாநில மாநாட்டில் எங்கள் ஸ்டாலில் கிடைக்கும்.

சிந்தனைச் சிற்பி

சி. பி. சிற்றரசு

எழுதியவை

1. சுதந்திரத் தந்தை ரூசோ 1 0 0
2. தங்க விலங்கு 1 0 0
3. சாய்ந்த கோபுரம் 1 0 0
4. மதி (நாடகம்) 1 0 0
5. விஷக் கோப்பை 1 0 0
6. மார்டின் லூதர் (கம்பதிப்பு) 0 10 0
7. வெங்கலச்சிலை („) [...] 0

தமி[ழ்] [...]ன்றம்

தபால் பெட்டி எண் 316.

தெப்பக்குளம் :: திருச்சி.

எங்கள் இதயவிளக்கு; ஒரே தலைவர்!

வாழ்வு, சுகம், 'குணம், அன்பு, வீரம், வெற்றி—அண்ணா!'

இந்தியப் பொதுத் தேர்தல்

ஏற்பாடுகள், விவரங்களை ஒலிபரப்ப பி. பி. ஸி. திட்டம்

லண்டன், டிச. 16—

இந்தியப் பொதுத் தேர்தல் விவரங்கள், முறைகள் செய்யப் பட்டுள்ள ஏற்பாடுகள், தேர்தலில் போட்டியிடும் சிலமுக்கிய பி. பி. ஸி. (பிரிட்டிஷ் ரேடியோ ஏற்பாடு செய்திருக்கிறது.)

இந்தியாவில் 25 வருஷக் காலத்தனுபவம் பெற்று வரும், 'நியூஸ் கிரானிகிள்' பத்திரிகையின் தென் கிழக்கு ஆசியா நிருபருமான ஸ்ரீ நார்மன் கிளிப் இந்திய தேர்தல்பற்றிப் பேசுவார்.

தேர்தல் விவரங்களை அவ்வப்போது பிரிட்டிஷ் மக்களுக்குத் தெரிவிக்கவும் பி.பி.ஸி. ஏற்பாடு செய்திருக்கின்றது.

சுதந்திர நாட்டில் நடைபெற விருக்கும் பெரும் அளவு தேர்தல் இந்தியாவில் நடப்பது தான் என்பதைக் கருதியே இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

இரேட் பிரிட்டனில் தபால் மூலம் ஓட்செய்தவர்கள் 757067 பேர்கள்

லண்டன், டிஸ 16—

வோட் அளிக்கும் தினத்தன்று வோட் சாவடிக்கு வர முடியாதவர்கள் நாட்டை விட்டு சேவை காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள மாலுமிகள், ஆகியோர் பிரிட்டனில் தபால்மூலம்வோட் செய்துள்ளனர்.

இவ்வருஷப் பொதுத் தேர்தலில் இங்கிலாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகிய இடங்களில் 685700 பேர் தபால் மூலம் [illegible]

[illegible] பண்டித நேருவின் பிரசங்கங்களைக் கேட்டு மயங்கிவிடக் கூடாது என்று மக்களைக் கான் கேட்டுக்கொள்கிறேன். சென்ற 4 ஆண்டுக் காலத்தில் பண்டித நேரு ஏழைகளின் வாழ்க்கை நிலையை ஏதாவது உருப்படியாகச்சாதித்திருக்கிறாரா என்பதைத்தான் மக்கள் வணிக்க வேண்டுமே தவிர, அவருடைய பிரசங்கங்களை [illegible] கவனிக்கக் கூடாது.

மாநில மாநாட்டின் மூன்றும் நாள் நிகழ்ச்சி 15-12-51 காலை பத்தரை மணிக்கு திராவிடப் பண்களுடன் தொடங்கிற்று,

தோழர் என். வி. நடராசன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி, பொதுச் செயலாளர் அண்ணா அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

அதனை வழி மொழிந்து முன்னணி வீரர்கள் முழக்கமிட்டார்கள்.

என். எஸ். இளங்கோ

தஞ்சை மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள். போராட்ட மேடைக்கு அண்ணா அவர்கள் அழைத்துச் செல்ல வேண்டுமென்று குறிப்பிட்டு, மேலை நாட்டு அரசியல் சரித்திரங்களையும் சான்றுகளையும் சுட்டிக் காட்டி அத்தகைய லட்சியப் பாதையில் அழைத்துச் செல்லக் கூடியவர் அண்ணா ஒருவர் தான் என்று கூறினார்.

முல்லை வடிவேலு

எழுத்திலே, பேச்சிலே, நடிப்பிலே நம் இதயங்கவர்ந்து திராவிடச் சோலையிலே நம்மையெல்லாம் நடமாடவிடும் தளபதி அண்ணா ஒருவர்தான்! எத்தனையோ தளபதிகள் தோன்றினார்கள். அவர்களுள்பலர் மறைந்து விட்டார்கள்; சிலர் மாறி விட்டார்கள், சிலர் விரட்டப்பட்டார்கள். எதிர் நீச்சல் போட்டு இயக்கத்தைக் கோட்டையாக்கிய பெருமை அண்ணாவைத் தான் சாரும் என்று குறிப்பிட்டார்.

சத்யவாணிமுத்து

தாய்க் குலத்தின் வாழ்த்துக்கள் பெற்றுத் தன்மான நடைபோட்டு, தங்கத் தாய்நாட்டை [illegible] வோலேயா இ[illegible] [illegible] கேள்விக்குறி திட[illegible]

சம்பள உயர்வு

நியூயார்க், டிச 15—

ஜனவரி 1-ந் தேதியிலிருந்து ஐ. நா. காரியாலயத்திலுள்ளவர்களுக்கு 75 சதவிகித சம்பள உயர்வு அளிக்க வேண்டுமென்று ஐ. நா. ஜெனரல் அசெம்பிளியை ஐ. நா. காரியதரிசி தோழர் டிரிக்வில் கேட்டிப்பதாகத் தெரிகிறது. இதனால் 1952 சபை 967,000 டாலர் அதிகப்படி செலவழிக்க நேரிடுமாம்.

++++++++++++++++

முரசொலி எழுப்பும் மூன்றே எழுத்துக்கள்

"ததும்ப ஜோதி; கொஞ்சிடும் புயல்; வெஞ்சமர்ச்சீயம்!"

அறிஞர் அண்ணாவுக்கு அன்புமாலை

—(o)—

கழகச் செயல் வீரர்கள் காணிக்கை

துடன் முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவுற்றன. பிற்பகல் நிகழ்ச்சி மாலை 4 மணிக்குத் துவங்கிற்று தோழர் செல்லமுத்தும் மற்ற நண்பர்களும் பாடல்கள் இசைத்தனர்.

சிவசாமி

தூத்துக்குடி தோழர் சிவசாமி அவர்கள் சட்டதிட்டங்களுக்கு அடிமையாகி, கட்டுப்பாட்டுக்கு அடங்கி, கண்யத்திற்கு மதிப்புக் கொடுத்துக் கழகம் பணி புரிய வேண்டுமென்றும் அதற்கான பாதையை அண்ணாதான் செப்பனிட்டுக் கொடுக்கத் தகுதி படைத்தவரென்றும் குறிப்பிட்டார்.

கோவிந்தசாமி

கோயால் பீடிக்கப்பட்டு வைத்ய சாலையில் இருந்த நான் ஓடோடி வந்தேன். [illegible] பாடபத்வத்கலம் [illegible]ருப்பார். கோபாலர் 'கோ' வென்று அலறியிருப்பார். மாதவ மேனன் மருண்டிருப்பார். குமாரசாமி குமுறியிருப்பார். அரியல் பீட அதிபர் முதல், ஆண்டி ஆருடகாரர் வரை நமது ஊர்வலங்கண்டு உறுமியிருப்பார்கள். மாற்றுக் கட்சித் தோழர்களும் கதி கலங்கி, வெட்கித் தலைகுனிந்திருப்பார்கள்! அது நமது வீரபவனி! திராவிட நாட்டை

யிலேயிருந்து மக்கள் மன்றத்திலும் நிறுத்தப்பட்டவர்கள். ஆனந்த பவத்தைத்திலேயிருந்து அரசியல் வாரிசாக அழைக்கப்பட்டவர்ல. பதினைந்து வருட பொது வாழ்விலே தொண்டராய், பத்திரிகை ஆசிரியராய், பிரசாரகராய், செயலாளராய் தளபதி தலைவராய் அறிஞராக திராவிட இனத்தின் எழுச்சியை எண்ணத்தை அபிலாஷைகளை பிரதிபலித்து தலைவரானவர் சீமான் வீட்டுப்பிள்ளையல்ல நம்மைப்போல பாட்டாளிகுத் தாக் குடும்பத்திலேபிறந்தவர் இன்றுநமக்கு நாயகமாம் திகழ்பவர்.

அண்ணாவின் ஆற்றலையோ, பெருமையோ நான் பேசுவது அவசியமில்லாதது அர்த்தமற்றது ஒன்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன். இக்கடிப்பட்ட [illegible] தலைவரை [illegible] அமைத்து இரண்டு ஆண்டுகள் மாபெரும் சாம்ராஜ்ய சிருஷ்டிகள் கூட சாதிக்காத பலப்பல செயல்களைச் சாதித்து மாநாட்டிலே கூடியிருக்கிறோம் திராவிட நாடு அடைவதற்கான வழியைச் சொல்லும் அண்ணாவின் அறவுரைக் கேட்டு!

எதிர்ப்பும்—ஏசலும்

பிரிந்த நம்மீது, சொல்லம்புவில்லையும், எதிர்ப்பும், ஏசலுரவகது குவிந்தன இலட்சிய வீம்

அண்ணாவின் வழிதான் திராவிடவிடுதலைக்கு நேரான வழி என்று பேசினார்.

மு. கருணாநிதி

கை தட்டுதலுக்கிடையே எழுந்து, அண்ணாவைப் புகழ்வது என்றால், பட்டை தீட்டப்பட்ட வைரத்தை பட்டை தீட்டுவது என்றும், மெருகு கேற்றிய தங்கத்திற்கு மெருகு தருவது என்றும் ஆகிவிடும் 'அண்ணா' என்ற சொல்லை எண்ணும் போதே முகத்திலே புது ஒளி பிறக்கிறது! இதயத்திலே இன்பகீதம் எழும்புகிறது.

மனித வாழ்விலே இணைந்து கிடக்கும் முக்கிய சொற்கள் எல்லாமே மூன்றே முத்தால் ஆனவை.

வாழ்வு என்பது மூன்றெழுத்து வாழ்விலே கிடைக்க வேண்டிய சுகம் மூன்றெழுத்து [illegible] 'திராவிடப் பதமே' சரித்திரத்தில் இல்லை என்று சொல்லும் அக்கபோதிகளின் காலித்தனத்தைக் கண்டு நாம் வருந்துகிறோம்! நம கொள்கையைச் சிதைக்க முற்பட்ட கம்யூனிட்டுகளை, பொதுத் தேர்தலிலே முறியடித்து, தோல்வியுறச் செய்ய, ஒவ்வொரு திராவிடனும் கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும்.

அடைவீர் அன்பர்காள்!

மாநாடு நடத்த எஸ். ஐ. ஏ.

என். வி நடராசன் சொற்பொழிவு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குன்றத்தூரிலே எட்டு முறை சுட்டனர்! இருந்தாலும் நாம் கண்யத்தை இழக்கவில்லை 144 தடையை மீறினோம்: அதற்காக நம்மீது வழக்குத் தொடரப்பட்டது; சைதாப்பேட்டை கோர்ட்டில் நாங்கள் வழக்குக்காகச் சென்றிருந்தோம் நீதிபதி எங்களைப் பார்த்ததும், வழக்குப் பதிவாயிற்று, ஆனால் வழக்கைப் பற்றிய குறிப்பு (ரிகார்டு) காணப்படவில்லை. பிறகு சில காலம் பொறுத்து குறிப்பு கண்டெடுக்கப்பட்டு இப்பொழுது வழக்கு மீண்டும் நடைபெறுகிறது. அரசியலாரின் இந்த மந்தபுத்தியை என்னவென்று சொல்வது வெள்ளையராட்சியிலே, பெரிய பெரிய புரட்சிகளுக்கும், குழப்பங்களுக்கும் 144 தடைபோட்டது! ஆனால் இப்போது, மூச்சுக்கு மூச்சு 144 இந்த 144 போடும் அரசியலுக்கே நாம் 144 போட்டு அதை அழுத்த வேண்டும்—அழிக்க வேண்டும் (கைதட்டல்) தாம்பரத்திலே நின்ற ரயிலுக்குக் கருப்புக்கொடி கட்டியதாக நம் மீது புகார் வழக்கு அது பத்திரிகையில் விளம்பரப் படுத்தப்படுகிறது ஆனால் லட்சக்கணக்கிலே கூடி செயலாற்ற இருக்கும் நமது மாநாட்டைக் குறித்து ஒரு வரிகூட இங்குள்ள தேசிய மட்டரகப் பத்திரிகைகள் போடவில்லை!

இந்தப் பொதுத் தேர்தலிலே காங்கிரசை எதிர்க்கும் முன்னணிக் கட்சிக்கு அண்ணா அறவுரைப்படி ஆதரவு தந்து, ஒரே மூச்சாகச் செயலாற்றி, காங்கிரசை வீழ்த்த வேண்டும்! காங்கிரஸ் மீண்டும்பதவிக்குவந்தால் நாடு நாசமாகும், சுடுகாடாகும்! ஏகாதிபத்ய வெள்ளையரையே வீழ்த்திய நமக்குக் காங்கிரஸ் [illegible] காண் ஆகியோர் [illegible] தேஎஸ். ஐ ஏ. ஏ. மைதானத்தில் முஸ்லிம் லீக் நடத்தினர் அதில் பலருக்கு பாகிஸ்தான் பெற்றனர் நீங்கள் ஏன் மாநாடு நடத்துகிறீர் திராவிடஸ்தானை நீங்கள் அடைந்தே தீருவீர் அன்பர்காள் என்றனர் அவர்கள் ஆசை மலர, நாம் அடைவோம், அடைவோம், திராவிடம் (பலத்த கைதட்டல்) அதற்குக் கட்டுப்பாடு கண்யம் மிகப் பெருத்த அளவில் நம்மிடம் இருக்க வேண்டும்.

இந்தியா-பாக் பேச்சு முடிவு

உணவு சப்ளை பற்றி ஆலோசனை

கராச்சிக்கு நிலக்கரி சப்ளைக்கு ஏற்பாடு

புதுடில்லி, டிச 15—

கடந்த 3 தினங்களாக இந்தியா பாகிஸ்தான் அதிகாரிகளிடையே இங்கு நடைபெற்ற சம்பாசணைகள் இன்று முடிவடைந்தன. பாகிஸ்தானுக்கு நிலக்கரி அனுப்புவது சம்பந்தமாக ஒரு ஏற்பாட்டுக்கு இருதரப்பு அதிகாரிகளும் சம்மதித்துள்ளனர்.

இவ்வருஷம் டிசம்பர் இறுதிக்குள் பாகிஸ்தான் இந்தியாவுக்குச் சப்ளை செய்ய வேண்டிய பாக்கி உணவு தான்யம் குறித்து விவாதிக்கவும் இச்சந்தர்ப்பம் பயன்படுத்திக் கொள்ளப்பட்டதாக இவ்வதிகாரிகள் சந்திப்புப்பற்றி இந்திய சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

கடல் மூலமாகத் தற்போது பாகிஸ்தான் செல்லும் நிலக்கரி ஏற்றுமதியின் அக்ரிகை அதிகரிப்பதே ஏற்பாட்டின்முக்கிய அம்சம் இதன்படி மொத்தம் ஒன்றேகால் லட்சம் டன் வீதம் பாகிஸ்தானுக்கு இந்தியா நிலக்கரி அனுப்பும், 1952 ஜூன் மாதத்துக்குள் வர்த்தக ஒப்பந்தப்படி பாகிஸ்தானுக்கு இந்தியா 21 லட்சம் டன் நிலக்கரி சப்ளை செய்ய வேண்டும். அக்டோபர் முடிய சுமார் 7 அரை லட்சம் டன் சப்ளை யாகியுள்ளது.

பாகிஸ்தானுக்கு ரூ. 50 வரை அனுப்ப அனுமதி

[illegible]

2-12-51-ம் தேதி நடந்த தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதுபிறகு 10-12-51 தேதி தி. மு. க. உறுப்பினர்கள் இரவு 8 மணிக்கு கழக உறுப்பினர் திருஆர். கே பழனிசாமி கடையில் கூடி கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றப்பட்டன காலியான ஸ்தானத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தது.

பனங்குளம்:— தி. மு. க. வின் உறுப்பினர்கள் கூட்டம் 9-12-51 ஞாயிறு கிழமை துவக்கப் பள்ளியில் செயலாளர் தோழர் எம். எஸ். விஸ்வநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம்கீழ்க் கண்ட தோழர்கள் சொற்பொழிவாற்றினர்கள் எஸ். வி. சதானந்தம், எஸ். கே. சண்முகம் எம், எஸ் நாதன், எஸ். வடிவேல எம். எம். ராமநாதன், எம். ஏ. சுப்பிரமணியன், எம். எஸ். சிற்குருநாதன் பின்னர் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவுற்றது,

தூத்துக்குடி:— திராவிட இளைஞர் முன்னேற்ற கழகத்தின் சார்பாக தோழர் டி. கதிறைகுளம் அவர்கள் தலைமையில் ஓர் இறங்கல் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் 9-12.51 காலை தி. மு. க. முக்கிய உறுப்பினர் தோழர் சி. பாண்டியன் அவர்கள் வயது (45) இயற்கை எய்தினதற்காக அவருடைய சேவையை பற்றி தோழர்கள் எம். தங்கச்சாமி தமிழரசன் வி. வேதநாயகம் ஆகியோர்கள் பேசினார்கள் அதன் பின் ஓர் அனுதாப தீர்மானம் நிறைவேறியது இறங்கல் கூட்டம் மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

காத்தசாமிபாளையம்:- புஞ்சைத்தலையூர் திராவிட முன்னேற்ற கழக செயற் குழுக் கூட்டம் 9-12.51ல் ஞாயிற்றுக் கிழமை இரவு 7-30மணிக்கு காத்தசாமி பாளையம் இளையப்பா சாயாக்கடையில் ஆரம்பிக்கப்பட்டது அது சமயம் நிர்வாகஸ்தாரும் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கூடி உள்ளனர் ஷ கூட்டத்திற்கு துணை செயலாளர் கே. வணாச்சிமுத்து அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது அது சமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறறப்பட்டது.

எகிப்து அரசர் பரூக் சூடானின் மன்னர்

ரஷ்ய அங்கீகாரம் பெற வில்லையாம்

கெய்ரோ, டிச. 15—

எகிப்து மன்னர் பரூக்கிற்கு சூடானின் மன்னர் என்ற பட்டமும் இப்பொழுது அளிக்கப்பட்டுள்ளது இது ரஷ்யர் அங்கிகாரம் பெற்றுள்ளது என்ற வதந்தியை கெய்ரோவில் உள்ள ஸோவியத் ஸ்தானிகாலயத்தின் காரியதரிசி எம் விக்கன்டி ஸொபோலோவ் மறுத்துள்ளார்.

ஏன் அடிக்கடி எகிப்தின் வெளிநாட்டு இலாகாவிற்கு ஸொபோலோவ் செல்லுகின்றார் என்று கேட்டதற்கு இவர் கூறியதாவது:— எகிப்திற்கும், ரஷ்யாவிற்கும் இடையே ஒரு வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய பேச்சு வார்த்தைகள் நடைபெறுகிறது.

ஸயாம் அயல்நாட்டுக் கொள்கையில் மாறுதலில்லை

பாங்காக் டிஸ 15—

சமீபத்தில் தாமாலாந்தில் அதிகாரத்திற்கு வந்துள்ளவர்கள் தன் நாட்டின் அயல் நாட்டுக் கொள்கையில் எவ்வித மாறுதலுமில்லை என்று அறிவித்துள்ள[illegible]

[illegible] வது [illegible] என்றும் [illegible] யூனின் எதிர்ப்பு அ[illegible] [illegible]ருக்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்தியா-பாகிஸ்தான் வர்த்தக ஒப்பந்தம்

டில்லியில் சம்பாஷணை

புதுடில்லி டிச 15—

இந்தியா பாகிஸ்தான் வர்த்தக உடன்படிக்கை விஷயமாக நால்வர் கொண்ட பாகிஸ்தான் தூது கோஷ்டி வர்த்தக மந்திரி காரியால்ய அதிகாரிகளுடன் சம்பாஷணை நடத்தி வருகிறது.

பிப்ரவரியில் கையெழுத்தின் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் அனுப்புவதில் காலதாமதம் காடாதென்பதை இருதரப்பினரும் வற்புறுத்திவருகின்றனர். இந்திய நிலக்கரி துரிதமாக சப்ளை செய்யப்பட வேண்டும் என்பதில் பாகிஸ்தான் மிகவும் தீவிரமாக இருக்கிறது.

துருக்கிக்கு உலக பாங்கிக் கோஷ்டி

இஸ்தான்புல், டிச 15—

7 பேர்கள் கொண்ட சர்வதேச பாங்கியின் தூது கோஷ்டி [illegible] துருக்கிக்குள்ள அணை [illegible] பார்வையிட்டு உதவி [illegible] நிர்ணயிக்க இங்கு வந்துள்ளது.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

திராவிடர் டைரி—1952

திராவிடர் அனைவரும் பெற்றிருக்க வேண்டிய மிகச்சிறந்த நாட்குறிப்பு ◇ ஒவ்வொரு தி. மு. க. தோழருக்கும் பூரிப்பளிக்கத்தக்க புதுவகை வெளியீடு.

இளைஞர் உலகத்தின் இதயகீதமாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய எல்லா விவரங்களும் அடங்கிய எழிலமிகு ஏடு.

உங்கள் பிரதிக்கு உடனே முந்திக் கொள்ளுங்கள்! ◇ சென்ற ஆண்டுபோல கிடைக்கவில்லையே என்று பிறகு வருந்தாதீர்கள்!

இந்த ஆண்டின் நாட்குறிப்பில்

* அறிஞர் அண்ணாதுரையின் சென்ற 15 ஆண்டு காலப் பேச்சு, எழுத்து ஆகியவற்றிலிருந்து அரிதின் முயன்று திரட்டப்பட்ட அரிய பொன்மொழிகள் ஒரு நாளைக்கு ஒன்று வீதம் 365— இவை, சென்ற இரண்டு ஆண்டு டைரிகளிலும் வெளிவராதவை, புதியவை, சிறந்தவை.
* தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாவின் புதிய புகைப்படம்.
* தி. மு. க. மாநிலமாநாட்டின் திறப்பாளர் நீலமேகம், கண்காட்சித் திறப்பாளர் சிற்றரசு, விளம்பரச் செயலாளர் கருணாநிதி, செயலாளர்கள் மணிமொழியார்—மனோகரன், வரவேற்புத் தலைவர் என். வி. நடராசன் ஆகியோரின் படங்கள்.
* தி. மு. க. கொடி. இரு நிறத்தில
* மதுரைப் பொதுக்குழுவில் நிறைவேற்றப் பட்ட கழகச் சட்டதிட்டத்தின் சுருக்கம். கழக மாளிகையின்— புகைப்படம்.
* தலைமைக் கழகப் பொதுக்குழு, துணைக் குழுக்களின் விவரங்கள், உறுப்பினர் பெயர்கள்
* தி.மு.க, கிளைகள் 650ன் விவரங்கள், அவற்றின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், விளம்பர உறுப்பினர் பெயர்கள்—மாவட்ட வாரியாக
* மாவட்டக் கழகங்களின் விவரம்
* தி.மு. மாணவர் கழகவிவரங்கள், செயல் உறுப்பினர் பெயர்கள்.
* திராவிடர் கொண்டாடுதற்குரிய திருநாட்கள்
* அரசினர் விடுமுறை நாட்கள்
* தபால் தந்தி கட்டண விவரங்கள், விற்பனைவரி வருமான வரி விவரங்கள், ஆவணப் பதிவு (ரிஜிஸ்ட்ரேஷன்) கட்டணங்கள் மற்றும்பல இன்றியமையாத குறிப்புகள்.

அழகான அமைப்பு 550 பக்கங்கள் விலை ரூ. 1-0-0

ஒரு பிரதி வேண்டுவோர் சாதாரணத் தபாலில் அனுப்ப ரூ, 1—2—0-ம், பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 1—6—0-ம் அனுப்பவேண்டும்,

விற்பனையாளர் கழிவு 20% அனுப்பும் செலவு வேறு.

முன்பணமின்றி எவருக்கும் அனுப்பப்பட மாட்டாது.

மாநில மாநாட்டில், டைரி விற்பனைக்குக் கிடைக்கும்.

போர்வாள் அலுவலகம் பவழக்காரத் தெரு, சென்னை 1.